3. தகவல் கோரல்.

(அ) பெங்களூர்-ஹோசூர் ரோடில் போக்குவரத்தில் தமிழக பஸ்களும், கார்களும் பெங்களூருக்குப் போக முடியாமல் இருக்கும் நிலை.

Thiru K. S. G. HAJA SHAREEF: Mr. Speaker, Sir, I wish to bring to your kind attention the very threatening situation that is happening at Bangalore: I was told this morning over the telephone that no car, or bus or Auto Riksha belong to Tamils is being permitted to ply from Bangalore to Hosur and other places. They are being chased. Even if some people are permitted to go to Hosur they are being chased out and they are even being attacked. Similarly no car or any other vehicle is being allowed to ply from Hosur to Bangalore. This is a very serious situation Sir. I do not know what action has already been taken by the Government and if no appropriate action is taken by the Government I would request through you, Sir, that the Government should immediately take appropriate action to see that life and property of our pepole are protected and these atrocities are stopped forthwith. Thank you.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே இது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டுள்ளன. இப்போதும் சில பல கலவரங்கள் இருப்பதின் காரணமாக ஒசூர் தாண்டி நம்முடைய பஸ்கள், கார்கள் போகாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அங்கே சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பின்னால் அவைகளை அனுப்பலாம் என்று இருக்கிறோம். 200-க்கு மேற்பட்ட லாரிகள் அடிபட்டு சுமார் 10 அல்லது 15 லட்சம் வரை சேதம் ஏற்பட்டிருப்பதாக குறிப்பு வந்திருக்கிறது. தக்க நடவடிக்கை எடுப்பதாக கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்தப் பிரச்னைக்கு முக்கிய காரணமாக இருக்கிற நடிகர் இராஜ்குமார் அவர்கள் கூட இன்றைக்கு காலையில் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை வைத்து சமூக விரோத சக்திகள் மற்றவைகள் எல்லாம் வன்முறைக் கலவரங்களில் ஈடுபடக் கூடாது என்றும், அமைதி காக்க வேண்டுமென்றும் அறிக்கை விட்டிருக்கிறார்கள். கர்நாடக மாநில முதலமைச்சர் ஹெக்டே அவர்கள் அறிக்கை விட்டது மட்டுமல்லாமல், கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என்று எச்சரித்தும் இருக்கிறார்கள். ஓரளவிற்கு நேற்றைய நிலையிலே அமைதி ஏற்பட்டு இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும் பீதி இருந்துகொண்டு இருக்கிறது. இன்று, நாளை பார்த்து விட்டு அங்கு தடுத்து நிறுத்தப்பட்டு இருப்பவைகள் எல்லாம் போகிற சூழ்நிலை ஏற்பட்டதற்கு பின்னால் அவைகளை விடலாம் என்ற காரணத்தினால் தான் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த பஸ்கள், லாரிகள், மற்றவைகள் எல்லாம் போக வேண்டாம் என்று நிறுத்தி வைத்திருக்கிறோம்.